# முடிவுரை

## முடிவுரை

பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, தாராபுரம், காங்கயம், பெருந்துறை, கோபி, சத்தி, பவானி ஆகிய ஏழு வட்டங்களில் பேயோட்டுதல் நடத்தப் பெறும் ஊர்களைப் பரவலாகத் தேர்ந்தெடுத்து ஆய்வுக் களன் நிர்ணயிக்கப் பெற்றது. களப் பணியில் தொகுக்கப் பெற்ற பதினைந்து பாடல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றன.

நாட்டுப்புறச் சமயம் தொன்மையானது என்பர் மானிடவியலார். நாட்டுப்புறச் சமயத்தின் ஒரு கூறாகவே பேயோட்டம் நிகழ்ந்து வந்திருக்கிறது. ஆவியுலகக் கோட்பாட்டின் தொடர்ச்சியாகவும் எச்சமாகவும் பேயோட்டுதல் இன்னும் கிராமங்களில் நடந்து வருகிறது. பேயோட்டும் பூசாரிகள் மிகச் சிறந்த உள நோய் மருத்துவர்களாகச் செயல்படுவதன் விளைவாகவே பேய் பிடித்தவர்கள் நலம் பெறுகின்றனர். பேய் பிடித்தவர் என்று கருதப்பெறும் அனைவரும் பூசாரியால் நலம் பெறுகிறார்கள் எனச் சொல்வதற்கில்லை. ஒரு சிலரின் நோய் முதிர்வதற்கும் பேயோட்டுதல் வழிவகுத்து விடுவதுண்டு. இச் சூழ்நிலைகளில் நாட்டுப்புற மக்கள் தெளிவு பெற வேண்டியது இன்றியமையாதது. இதனை வலியுறுத்துவதே இவ்வாய்வின் தேர்ந்த முடிவாகக் கருதலாம். உள்ளத்தில் எழும் கற்பனைகளும் மரபு வழிக கற்பிக்கப்பட்ட அச்சங்களும் பேய் என்பதை உருவாக்குகின்றன. மன நலம் குறைந்தவர்கள் தங்களைப் பேய் பிடித்து ஆட்டுகிறது என நினைத்தால் அவர்களுக்குப் பேயோட்டம் நல்ல மருந்து; நினைத்த பலனைத் தர வல்லது.

பேயோட்டுதல் கிராமங்களில் தொடர்வது வரம்பு மீறாத வரை சமுதாயத்திற்குக் கேடு விளைப்பதில்லை. பேய் பிடித்தோர் தன்னிலை மீறி முதிர் மன நோய்க்குத் தள்ளப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்குக் கொடுமையான சடங்குகளைச் செய்வது மிகுந்த கேட்டை விளைக்கும். பேயோட்டுதல் அந்நோயாளிகளுக்கு எவ்வித நல்ல பலனையும் தராது. 'பேய்' என்பதைத் தீய ஆவி எனக் கருதியும் மன நோய் எனக் கருதியும் அதற்கான சிகிச்சை முறையை நோயின் தன்மையறிந்து தேர்தல் வேண்டும் என்பதே இவ்வாய்வின் சமூகம் சார்ந்த தீர்வாகும் ( Society oriented solution ).

மித மன நோயாளிகளுக்கு மன நல மருத்துவர்கள் அளிக்கும் சிகிச்சை முறைகளின் படிநிலைகளைப் பேயோட்டும் பூசாரிகளின் செயல்பாடுகளில் காண முடிகிறது. நோயாளிகளின் மன இறுக்கத்தைத் தளர்த்துவதற்குப் பூசாரிகள் செய்யும் ஒவ்வொரு செயலும் உளவியல் சார்ந்ததாக உள்ளது. சமூகத்தால் விலக்கப்பட்ட சிலவற்றைப் பேய் பிடித்த நிலையில் செய்யும் போது சமூகம் அதைக் குறை கூறுவதில்லை; மனக் குமுறல்களை மடை திறந்த வெள்ளமென வெளிப்படுத்தப் பேயோட்டம் கருவியாகி வழி வகுத்துக் கொடுக்கிறது. மனத்தின் கண் இறுக்கத்தை உருவாக்கிய உணர்வுச் சிக்கல் வெளிப்படுவதற்குப் பேயோட்டம் ஒரு வடிகாலாக அமைகிறது.

தொகுக்கப் பெற்ற பேயோட்டப் பாடல்கள் அமைப்பு அடிப்படையிலும் சடங்குகள், நம்பிக்கைகள் அடிப்படையிலும் ஆய்வு செய்யப் பட்டு முடிவுகள் எய்தப் பெற்றுள்ளன. உளவியல் பார்வையில் இவை ஆழமாகவும் நுணுக்கமாகவும் ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. இனி வரும் ஆய்வாளர்கள் சமுதாய அடிப்படையில் இப்பாடல்களை ஆய்வதற்கு

இவ்வாய்வு வழிகாட்டும். சமுதாயத்தில் நிலவி வரும் பெண்ணடிமைத் தனம் ஆணாதிக்கம் ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்வதற்கும் வரும் ஆய்வாளர்களுக்கு இவ்வாய்வு துணை செய்யும்.

தமிழகத்தின் எல்லா கிராமங்களிலும் பேயோட்டுதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த நாட்டுப்புறவியலாய்வாளர்கள் இப் பேயோட்டப் பாடல்களைத் தொகுக்கும் முயற்சியில் இறங்கினால் அம் மாவட்டப் பாடல் தொகுப்புக் கிடைப்பதோடு ஆய்வாளர்களின் நூலறிவும் பட்டறிவும் கிராம மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும். பேயோட்டப் பாடல்கள் சார்ந்த ஆய்வுகள் சமுதாயப் பயன்பாடு உடையனவாக ( social utility ) அமையும்.

L.5700